# 06.

## சின்ன யானை குட்டியே

நான் சிறிய வயதில் இருக்கும் போது நாம் அனைவரும் ஒன்றாகவே இருந்தோம். எனது அம்மாவும் மாமாமார்கள் இருவரும் நானும் பற்றை முற்புதர்கள் நிறைந்த வறண்ட வலய கானகம் ஒன்றிலேயே இருந்தோம். 'மகனே.. நீ என்னருகிலேயே இரு... எங்கும் தனியாக செல்லக்கூடாது' என்று அம்மா அடிக்கடி அறிவுறுத்துவாள். நானும் அம்மாவின் கால்களுக்கிடையிலும் தும்பிக்கையும் சுற்றி சுற்றியே இருந்தேன். ஒரு சில நாட்களில் அம்மா என்னை ஒரு வாவிக்கு அழைத்து செல்வாள். நாம் தண்ணீரில் இறங்கி மிகவும் சந்தோஷமாக இருப்போம். அப்போது அம்மா தும்பிக்கையால் நீரெடுத்து என் மீது தெளிப்பார். அது எனக்கு மிகவும் பிடிக்கும். ஒரு நாள் நான் அம்மாவிடம் 'அம்மா என் அப்பா எங்கே..? என்று கேட்டேன். அப்போது அம்மா சத்தமாக அழத்தொடங்கினார். அம்மாவின் அழுகை சத்தத்தை கேட்ட எனது மாமாமார்களும் ஓடோடி வந்தார்கள்.

'மகனே... உனது அப்பாதான் இந்த காட்டிலேயே இருந்த அழகான யானைராஜா... அழகான வெள்ளை நிறத்திலான மின்னும் தந்தங்கள்.. ஹ்ம்ம்.. தந்தங்களுக்கிடையே தும்பிக்கையை சுழன்றுகொண்டு நடக்கும் போது உனது அப்பா மிகவும் கம்பீரமாக இருப்பார். உனது அப்பாவை நினைத்து நான் மிகவும் பெருமைபட்டுள்ளேன். ஐயோ.. இந்த மனிதர்கள் மிகவும் கொடியவர்கள் என் மகனே.. அவர்கள் எம்மை வேட்டையாடுவதற்காக எத்தனிக்கிறார்கள் என்பதனை நாம் உணர்ந்துகொண்டோம். நாம் காட்டினுள் மறைந்து கொண்டுதான் இருந்தோம். மிகவும் பயத்துடனே இருந்தோம். ஒருநாள் நாம் மாலைநேரத்தில் வாவிக்கு நீராடுவதற்கு சென்றோம். அன்று அந்த கொடிய மனிதர்கள் வந்தார்கள். தூரத்தில் இருந்தே உனது அப்பாவை சுட்டிக்காட்டி பேசிக்கொண்டார்கள். நான் அதனை நன்கு கேட்டுக்கொண்டேன். 'அங்கு பாருங்கள்.. அமைச்சரே... ஆ... ஆ.. அதுதான். அதுதான் நமக்கு வேண்டியது. ஒரு தந்தமே ஆறு ஏழு அடி நீளமிருக்கும். மிகவும் பெறுமதியானதாக இருக்கும்' என அவர்கள் பேசிக்கொண்டார்கள். அதனை கேட்டவுடனே எனது உடம்பு சிலிர்த்து போயிற்று. எனக்கு இந்த ஆபத்தினை நன்கு விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருந்தது. நான் உனது அப்பாவிடம் கூறினேன். 'இங்கே பாருங்கள், நாம் இந்த காட்டை விட்டு வேறு எங்காவது செல்வோம். எனது மனம் பயத்தினால் நடுங்குகிறது... அந்த மனிதர்கள் உங்களை பற்றித்தான் பேசிக்கொள்கிறார்கள். எனக்கு பைத்தியமே பிடித்துவிடும் போலிக்கிறது' என்று. அப்போது உனது அப்பா

‘நாம் வேறு காட்டினை எங்கு தேடுவது..? மனிதர்களால் எம்மை இலகுவாக கண்டுபிடித்து கொள்ள முடியாதபடி மறைந்து வாழ்வதற்குதான் இருக்கிறது.’

மகனே... உனது மாமாமார் இருவரும் அப்பாவை சுற்றியபடியே இருந்தார்கள். ஆனாலும் உனது அப்பாவை காப்பாற்ற முடியவில்லையே... ஐயோ... ஒருநாள் அந்த கொடிய மனிதர்கள் அப்பாவை சூழ்ந்துகொண்டார்கள். ஏதோ ஒரு குழாய் மூலம் தீப்பந்தொன்றை எய்தார்கள். பாரியதொரு சப்தம் கேட்டது. அந்த தீப்பந்து உனது அப்பாவின் நெற்றியிலேயே வந்து பட்டது. அப்பா கீழே விழுந்தார் நான் கதறிக்கொண்டு ஓடினேன். தூரத்தில் இருந்து உனது அப்பாவை பார்த்துக்கொண்டிருந்தேன். அப்பா நிலத்தில் மண்டியிட்டு தந்தங்களை நிலத்தில் மோதிக்கொண்டு அழுதழுது உயிரிழுக்கிறார்... ஐயோ... நான் எப்படி அவரருகில் நெருங்குவேன்..? இஹி... இஹி...

‘நான் எப்படியாவது மனிதர்கள் எனும் ஜாதியில் ஒருவரையேனும் கொல்லுவேன்’ என மாமா சத்தமாக பிளிரினார். ‘எங்களுக்குத்தான் இந்த வனாந்தரம் சொந்தம்... பாவிகளே... போய் தொலையுங்கள்... என்று உங்கள் மாமா அன்று கத்தினார்... அப்போது அந்த மனிதர்கள் மாமாவின் பக்கமும் அந்த தீப்பந்து விடும் குழாயை திருப்பினார்கள். ‘தம்பீ... அந்த கொடியவர்கள் எம்மையும் கொன்றுவிடுவார்கள். வா சீக்கிரமாக சென்றுவிடுவோம்.’ என்று நான் ஓலமிட்டேன். நாம் விரைவாகவே அந்த இடத்தைவிட்டு விலகி தூ ரச்சென்றுவிட்டோம்.

மறுநாள் நாம் மீண்டும் அந்த இடத்திற்கு சென்றோம். இஹி... இஹி... அப்பா அவருடைய இரத்தத்தின் மேலேயே செத்துக்கிடந்தார்... அந்த அழகான தந்தங்கள் இரண்டும் இருக்கவில்லை. நான் அங்கேயே அழுதுகொண்டிருந்தேன். அப்போது நீ என் வயிற்றில் இருந்தாய்... நான் மிகவும் வேதனை அனுபவித்தேன் என் மகனே..! எனது வாழ்க்கை தனிமையாகிவிட்டது... அந்த தனிமையை யாராலும் போக்க முடியாது. இஹி... இஹி...’ அன்று எமது அம்மா வெகு நேரமாகவே அழுதுகொண்டிருந்தார். நானும் அழுதேன். இந்த காட்டில் சுவையான சாப்பாடே இல்லை. புதிய கொழுந்துகள் கொண்ட தாவரங்கள் இல்லை என்றே கூறலாம். அதனால் நாம் நால்வரும்... இரகசியமாக கிராமத்தினுள் செல்வோம். கிராமத்தை நெருங்கும் போதே வாசம் வரும்... ம்ம்ம்... அந்த வாசம் வருவது நெல்லிருந்து. நாம் இரவுவேளைகளில் திருட்டுத்தனமாக நெல்லை சாப்பிடுவதற்கு கிராமத்தினுள் நுழைவோம். ஒரு நெற்கட்டினை எடுத்து தும்பிக்கையால் பலமாக ஒரு முறை மூச்சை உள்வாங்கினால் அனைத்து நெல்மணிகளும் வாயினுள்ளே சென்றுவிடும். அவை மிகவும் சுவையாக இருக்கும். அப்போது

மனிதர்கள் தீப்பந்தங்களை எடுத்து வந்து கூச்சலிடுவார்கள். உடனே நாம் காட்டுக்குள் ஓடிவிடுவோம்.

ஒருநாள் அம்மா மிகவும் சந்தோஷமாக என்னிடம் வந்தார். அவர் தனது வாயினுள் வைத்திருந்த மஞ்சள் நிறமான பெரியதொரு காயை கொடுத்தார். மகனே இதை சாப்பிடு... இது மிகவும் சுவையானது. மனிதர்கள் இதனை பூசணிக்காய் என்று சொல்வார்கள். 'நானும் அதனை வாயினுள் வைத்து கடித்தேன். ம்ம்ம்...பூசணிக்காய் மிகவும் சுவையானது தான்...' 'மகனே... நீ வராதே...நான் இன்றும் இரவு கிராமத்துக்கு சென்று உனக்கும் பூசணிக்காய் கொண்டு வருகிறேன்.' என்று மாமாமார் இருவரும் அம்மாவும் சென்றார்கள். வெகுநேரமாகவில்லை. மாமாமார் இருவரும் அழுதுகொண்டு ஓடோடி வந்தார்கள். 'மகனே..! எல்லாமே முடிந்துவிட்டது... உனது அம்மா செ...த்...து...விட்டார்...' 'ஐயோ... மாமா... சொல்லுங்கள்... சொல்லுங்கள்... எனது அம்மாவிற்கு என்ன நடந்தது..? சொல்லுங்கள்...'

'மகனே... நாம் பூசணிக்காய் தோட்டத்திற்கு செல்லும் வழியில் அதன் வேலியோரத்திலேயே ஒரு பெரிய பூசணிக்காய் இருந்தது. உனது அம்மா ஆசையோடு அதனை எடுத்து வாயினுள் போட்டுக்கொண்டாள். அதனை கடித்தது மாத்திரம் தான்... 'டோங்' எனும் பாரிய சப்தத்துடன் அந்த பூசணிக்காய் வாயினுள் வெடித்தது... மகனே... ஐயோ...நினைத்து கூட பார்க்க முடியவில்லையே... உனது அம்மாவின் தும்பிக்கை கழன்று வீசுப்பட்டது... ஐயோ.. வாயினுள் இருந்த பற்கள் எல்லாமே நாற்புறமும் வீசப்பட்டது. அம்மா அங்கேயே சரிந்து விழுந்துவிட்டார். அம்மா இன்னும் துடி துடித்து கொண்டு இருக்கிறார்... ஐயோ..'நாம் அன்று இரவு முழுவதும் அழுதுகொண்டே இருந்தோம். எமக்கு என்ன நடக்கிறதே என்றே எனக்கு புரியவில்லை. நாம் அதிகாலையிலேயே அம்மாவை பார்க்கச்சென்றோம். மாமாமார் எனக்கு முன்பே அங்கு சென்றுவிட்டனர். 'மகனே.. உனது அம்மா இன்னும் சாகவில்லை. அங்கிருந்து எழுந்து கஷ்டப்பட்டு இங்கு வரையும் வந்திருக்கிறார். அங்கு விழுந்துகிடப்பது உனது அம்மாதான்.'

நாம் அவ்விடத்திற்கு ஓடோடிச்சென்றோம்... நினைப்பதற்கே கஷ்டமாக இருக்கிறது. அம்மாவின் தும்பிக்கை இருக்கவில்லை. என்னை அன்போடு அணைத்துக்கொண்ட அந்த தும்பிக்கை இருக்கவில்லை. என்னை பாசத்தோடு நீராட்டிய அந்த தும்பிக்கை இருக்கவில்லை... வாயும் இருக்கவில்லை. சின்ன சின்ன பூச்சிகள் அம்மாவின் காயத்தினை சுற்றி பறந்துகொண்டிருந்தன. அவை அந்த காயங்களை சாப்பிட்டுக்கொண்டிருந்தன. கண்கள் இரண்டும் மூடப்பட்டிருந்தன... ஆனால் அவற்றிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

ஐயோ… நான் என்ன செய்வேன்… எனது அம்மா… நாம் அழுதபடியே திரும்பி வந்தோம்.

நான் வனத்தில் தனிமையாகிவிட்டேன். நான் தனியாகவே காட்டில் அலைந்து திரிந்துகொண்டிருந்தேன். இப்படியிருக்கும் போது ஒருநாள் என்னை மனிதர்கள் சூழ்ந்துகொண்டார்கள். என்னை கயிறுகளினால் கட்டினார்கள். என் அருகிலேயே வந்தார்கள். எனக்கு மிகவும் பயமாக இருந்தது… இதயமே வெடித்துவிடுவது போல் இருந்தது. என்னால் ஒன்றுமே செய்யமுடியவில்லை. அங்கிருந்த ஒரு நல்லவர் என்னிடம் 'சின்ன குட்டியே.. நாம் உனக்கு ஒன்றும் செய்யமாட்டோம். எம் அனைவருக்கும் உன் மீது அன்பு இருக்கிறது… நாம் உங்களை கொல்பவர் அல்ல. பாதுகாப்பவர்கள்… நீ இப்போது வழி தவறிவிட்டாய்… நீ பயப்படாதே… உன்னை நாம் அன்புடன் பார்த்துக்கொள்வோம். என்று எனது தலையை அன்புடன் தடவினார். அப்போது என் பயம் இல்லாமல் போய்விட்டது. என்னை அவர்கள் ஒரு வாகனத்தில் ஏற்றி மிகுந்த தூரம் கொண்டு வந்தார்கள். இவ்வாறுதான் நான் இங்கு வந்தேன். என்னை போன்ற ஏராளமான யானைக்குட்டிகள் இங்கு இருக்கின்றன. எம்மனைவருக்கும் அம்மா அப்பா இல்லை. சில மனித பிள்ளைகள் எம்மை பார்த்து ஏளனம் செய்கின்றனர். அப்படி ஏளனம் செய்யும்போது எனக்கு மிகவும் கவலையாக இருக்கும். அவர்களுக்கு அம்மா அப்பா இருவரும் இருக்கிறார்கள். எனக்கு யாருமே இல்லையே… பெரிய யானைகள் கூட இங்கு கவலையாகத்தான் இருக்கிறார்கள். அவர்கள் எந்நேரமும் வனாந்தரத்தின் சுகத்தை பற்றியே பேசிக்கொள்வார்கள். மீண்டும் எப்போது காட்டிற்கு செல்வது என்றுதான் பேசிக்கொள்வார்கள். ஆனால் எனக்கோ காடு என்றாலே பயம்தான். காட்டிற்கு சென்று… எனக்கும் தந்தங்கள் வந்தால்… மனிதர்கள் என்னையும் கொன்றுவிடுவார்கள். பூசணிக்காய்களில் வெடிமருந்துகளை வைத்துக்கொடுத்தால்… எனது அம்மாவிற்கு நடந்தது எனக்கும் நடந்துவிடும்… நெற்களை சாப்பிட சென்றால் துப்பாக்கி சூட்டிற்கு ஆளாகிவிட வேண்டியதுதான்.

ஒருநாள் சிலர் என்னிடம் வந்து என்னை சுட்டிக்காட்டி பேசிக்கொண்டார்கள். 'நாம் இந்த குட்டிக்கு சீதா என பெயர் சூட்டினோம். நன்றாக வளர்ந்துவரும்'. 'நீங்கள் சொல்வது சரி… அழகான குட்டிதான்… இந்த குட்டியை அமைச்சருக்காக ஒதுக்கி வையுங்கள். அவரது தோட்டங்களில் வேலைகள் இருக்கின்றன…' ஐயோ எனக்கு மிகவும் பயமாக இருக்கிறது… நான் இந்த கொடிய மனிதர்கள் மத்தியில் எவ்வாறு தனிமையில் வாழ்வேன்..? அதைவிட எமது சரணாலயத்திலேயே வாழ்ந்துவிடலாம். ஐயோ என்னை எங்கும் கொண்டு செல்ல வேண்டாம்… என்னால் தனிமையில் வாழ முடியாது…

எனக்கு பயமாக இருக்கிறது... ஐயோ...

**அழுகாதே அழுகாதே - சிறிய குட்டி யானையே...**

**சன்சாரம் இப்படித்தான் - எமது குட்டி யானையே...**

**பாவம் செய்தால் நாம் எவரும் நரகத்திலே பிறந்திடுவோம்...**

**சுகத்தை விரும்பினாலும் துக்கத்திலேயே விழுந்திடுவோம்...**

**சரீரத்தினால் பெரிதானாலும் அப்பாவியாகவே இருக்கிறாய்...**

**மனதில் உள்ள சோகங்கள் உலகில் யார் தான் அறிவாரோ..?**

**மனிதனாக பிறந்தவுடன் பாவங்கள் செய்யாதீர்...**

**புண்ணியம் ஈட்டும் தருணத்தை கை நழுவ விடாதீர்...**